**Mamandur Sri Rajarathina Sivachariar Education, Research & Charitable Trust, India**

**Digital Library**

| | |
|---|---|
| **Title** | MAHOTSAVA VILAKKAM |
| **Language** | TAMIL |
| **Script** | TAMIL |
| **Courtesy** | MUKTABODHA INDOLOGICAL RESEARCH INSTITUTE |
| **Publication** | S. KUMARASWAMI GURUKKAL, ATCHUVELY, JAFFNA |
| **Source** | |

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# சைவசாஸ்திர பரிபாலனம்

# மகோற்சவ விளக்கம்

## க. சிவபுண்ணியம்

ஆன்மாக்களுக்கு ஆணவமாகிய மூலமல காரணத்தினாலே, கன்மானுசாரமாக உண்டாகும் பிறப்பு, அண்டசப், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என நால்வகைப்படும். அண்டசம் முட்டையிற் றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற் றோன்றுவன. உற்பிச்சம் வித்துக்களை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் றோன்றுவன. இவைகளின் விரிவு எண்பத்துநான்குநூறாயிரம் யோனிபேதமாம். இவ்வாறுள்ள யோனிகளுள் இதர யோனிகள் எல்லாவற்றையும் போகத்தினாலும் பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி மனுஷ்ய ஜன்மத்திலேயிருத்தல் மிகுந்த அருமையாம். அவ்வருமை ...

வாறுள்ள யோனிகளுள் இதர யோனிகள் எல்லாவற்றையும்
போகத்தினாலும் பிராயச்சித்தாதிகளினாலும் நீக்கி மனுஷ்ய ஜன்
மத்திலேயிருத்தல் மிகுந்த அருமையாம்.

### சிவஞானசித்தியார்

அண்டசஞ் சுவேத சங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ
டெண்டரு நாலெண் பத்து நான்குநூ றுயிரத்தா
லுண்டுபல் யோனி யெல்லா மொழித்துமா னுடத்துதித்தல்
கண்டிடுற் கடலைக் கையா னீந்தினன் காரி யங்காண்.

நரர்பயி றேயந் தன்னி னான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றன் மிக்கபுண் ணியந்தா னுகும்
தரையினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரு
மூழ்பெற லரிது சால வுயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே.

இப்படி மிக அருமையாகப் பெற்ற மனுஷ்ய ஜன்மத்தினால் ஒருபயன் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களிலும் நின்று சிவபெருமானை வழிபட்டுப் பரமபுருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களும் தனித்தனி உபாயம் உண்மையென வேறுபாடு பற்றி இருதிறப்படும். புகழ் முதலியவற்றை விரும்பி உலகப் பயனை நோக்கிச் செய்யும் உபாயச் சரியை முதல் நான்கும், மெய்யன்போடு முத்திநோக்கமாகச் செய்யும் உண்மைச் சரியை முதல் நான்குமாகச் சிவபுண்ணியம் எட்டாம். இன்னும் இவை ஒவ்வொன்றும் நந்நான்காகி முப்பத்திரண்டாக விரிந்து பலதிறப்படும். உபாயச் சரியை முதலியவற்றைச் செய்பவர்கள் ஸ்ரீகண்ட புவனம் வரையும் உள்ள புவனங்களை யடைந்து அங்குள்ள போகங்களை யனுபவித்து, மீட்டும் பூமியில் வந்து, உயர்குடியிற் பிறந்து, சைவசித்தாந்த உணர்ச்சியுடையவர்களாய் உண்மைச் சரியை முதலியவற்றை அநுட்டிப்பார்கள். உண்மைச் சிவபுண்ணியத்தின் பயனாகிய முத்தி, பதமுத்தி பரமுத்தியென இருவகைப்படும். பதமுத்தி சாலோகம், சாமீடம், சாரூபம் என்பன. பரமுத்தி சாயுச்சியமாம்.

சரியையை அநுட்டித்தோர் அகத்தொண்டர்க்குரிய உரிமை போல, சிவபெருமான் திருமேனி கொண்டிருக்கும்



உலகத்துள் எவ்விடத்துந் தடையின்றிச் சஞ்சரித்து, அவ்வுலக போகங்களை அநுபவித்து வாழ்வர். கிரியையை அநுட்டித்தோர் புத்திரர்க்குரித்தாகிய உரிமை போல, சிவபெருமானுக்குச் சமீபமாக விருந்து, அப் போகங்களை அநுபவித்து வாழ்வர். யோகத்தை அநுட்டித்தோர் தோழர்க்குரித்தாகிய உரிமைபோலச் சிவபெருமான் கொண்டருளுந் திருமேனியைப் பெற்று வாழ்வர். ஞானத்தை அநுட்டித்தோர் சிவபெருமானுடைய திருவடியில் இரண்டறக் கலந்து, நித்தியானந்தத்தை அநுபவித்து வாழ்தலாகிய பரமுத்தி யடைவர்.

முத்தியாகிய பேரின்பச் சுவையை அநுபவித்தற்கு அரும்புபோல் விளங்குந் தாதமார்க்கமாகிய சரியையும், மலர்போல் விளங்கும் புத்திரமார்க்கமாகிய கிரியையும், காய்போல் விளங்கும் சகமார்க்கமாகிய யோகமும், கனிபோல் விளங்கும் சன்மார்க்கமாகிய ஞானமும் படிகளாக இருக்கின்றன. அரும்பில்லாமல் மலர் உண்டாகாதவாறு போலச் சரியை யில்லார்க்குக் கிரியை பயன் கொடாது. மலர் இல்லாமற் காய் உண்டாகாதவாறு போலக் கிரியை செய்து அதனும் சித்தியடையாதவருக்கு யோகம் பயன் கொடாது. காயில்லாமற் கனி உண்டாகாதது போல யோகமில்லாதவருக்கு ஞானம் பயன்கொடாது. கனி உண்ணாதவர் அதன் சுவையை அறியமாட்டாதது போல ஞானமில்லாதவருக்கு முத்தியின்பங் கைகூடாது.

### தாயுமானசுவாமிகள்

விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே.

### திருநாவுக்கரசுநாயனார்

#### தனித் திருக்குறுந்தொகை

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழ லீசனென் னுங்கனி
இனிது சாலவு மேசற் றவர்கட்கே.

சரியையிற் சரியையாவது: சிவபெருமான் வீற்றிருக்குந் திருக்கோயிலில் ஆசாரமுடையவர்களாய்ச் சென்று, மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடல், சீரை வடித்தெடுத்துச் சுத்த

மாகிய சாணத்தினால் திருமெழுக்கிடுதல், தூபமிடுதல், தீபம் ஏற்றுதல், சந்தனவனங்களமைத்தல், புஷ்பமெடுத்தல், அப்புஷ்பங்களினால் மாலைகளைத் தொடுத்துச் சாத்துதல், சிவனடியார்களையும் குருவையும் கண்டபொழுது சிவனாகப் பாவித்து வணங்கல் முதலான புறத்தொண்டுகளைச் செய்தலாம்.

### திருநாவுக்கரசுநாயனார்

திருத்தாண்டகம்

*நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்*
*ஆரூரா வென்றென்றே யலறு நில்லே.*

சரியையிற் கிரியையாவது: சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, அரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், விக்கினேசாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், விநாயகர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றை வழிபடுதலாம். சரியையில் யோகமாவது: மனசில் சிவபெருமானுடைய உருவத்திருமேனியைத் தியானித்தலாம். சரியையில் ஞானமாவது: அத் தியானபாவனையின் உறைப்பினால் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தலாம்.

சரியையை அநுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால் நுண்ணுணர்வுடையவர்களாய், அருவுருவத் திருமேனியே பொருள், உருவத்திருமேனி அதனை யுணர்தற்கு இடமாகிய திருமேனியென்றறிந்து கிரியையில் விருப்புடையவர்களாய் அகத்தொழிலானும் புறத்தொழிலானும் வழிபடுவர்.

கிரியையிற் சரியையாவது: புஷ்பம், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய யாவையுஞ் சேகரித்தலாம்.



கிரியையிற் கிரியையாவது: பூதசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தியாகிய பஞ்ச சுத்தியுஞ் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்தியீறாகிய பதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து, அவ் வித்தியாதேகத்துக்குச் சிவனுள்ள நிஷ்களரூபமும், ஞானைகமயரும், சர்வ கர்த்தாவும், சர்வவியாபகருமாகும் பரமசிவனாகிய மூர்த்திமானைத் துவாதசாந்தத்தின்மேலே தியானித்து, முன்னே நியாசஞ் செய்த வித்தியாதேகத்தில் ஆவாகித்துச் "சுவாமீ, சர்வஜகத்துக்கும் நாதரே! பூசையின் முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியமாய் இரும்" என்று விண்ணப்பஞ்செய்து பூசித்துத் தோத்திரம் பிரதக்ஷிணம் நமஸ்காரம் பண்ணி முடித்தலாம்.

### தாயுமானசுவாமிகள்

*பஞ்சசுத்தி செய்துன்னைப் பாவித்துப் பூசைசெய்தால்*
*விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.*

கிரியையில் யோகமாவது: இருதயத்திலும், நாபி குண்டத்திலும், புருவமத்தியிலுஞ் செய்யும் பூசை, ஓமம், சமாதி என்னும் அந்தர்யாகபூசையாம்.

கிரியையில் ஞானமாவது: அந்தர்யாகபூசையின் உறைப்பினால் ஓர் அநுபவ உணர்வு நிகழ்தலாம்.

கிரியையை அநுட்டித்து வரவர உண்டாகும் பக்குவ முதிர்ச்சியினால் அதிநுட்ப அறிவுடையவர்களாய், அருவத் திருமேனியே பொருள் உருவத்திருமேனியும் அருவுருவத் திருமேனியும் அதனை அறிதற்கிடமாகிய திருமேனிகளென்று அறிந்து, யோகத்தில் விருப்புடையவர்களாய் அகத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்.

யோகத்திற் சரியையாவது: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன. இயமமாவது கொல்லாமை, உண்மை கூறல், கள்ளாமை, பிரமசரியம், தயை, வஞ்சனையில்லாமை, பொறுமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுத்தியுடைமை

என்னும் பத்துமாம். நியமமாவது தவம், சந்தோஷம், தெய்வம் உண்டென்னும் விசுவாசம், தானம், ஈசுவரபூசை, சித்தாந்தசாஸ்திர சிரவணம், இலச்சை, புத்தி, செபம், விரதம் என்னும் பத்துமாம். ஆசனமாவது இருக்கும் முறை. அது சுகாசனம் முதற் பலவகைப்படும். பிராணாயாமமாவது பிராணவாயுவை அடக்குதல். அது மந்திரசெபத்துடன் அடக்குவதும் மந்திரசெபமின்றி அடக்குவதுமென இருவகைப்படும்.

யோகத்திற் கிரியையாவது பிரத்தியாகாரம், தாரணை என்பன. பிரத்தியாகாரமாவது மனதைப் புறத்திற் செல்லவிடாதடக்குதல். தாரணையாவது மனதைச் சுழுமுனைமார்க்கத்திற் செலுத்துதல்.

யோகத்தில் யோகமாவது தியானமாகும். அது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறாதாரங்களையும் அதிதேவதைகளையும் அறிந்து, மூர்த்தியின் சொரூபத்தை மனதால் பிரமரந்திரத்தில் தியானித்தலாம்.

யோகத்தில் ஞானமாவது சமாதியாம். அது மூர்த்தியாகிய தோற்றமும் சிந்தித்தலாகிய தொழிலும் சிந்திக்கின்ற தானுமாகிய பேதங்களின்றி மூர்த்தியுந் தானும் இரண்டறக் கலந்து நிற்றலாம். இயமம் முதலிய எட்டும் வினைகள் கெடுதற்கு வழியாகிய அட்டாங்கயோகம் எனப்படும்.

சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் அநுட்டித்தவரவர உண்டாகும் பக்குவமுதிர்ச்சியினால் மெய்யறிவு விளங்கிச் சச்சிதானந்தவடிவாகிய ஒளிப் பிழம்பே பதியின் சொரூபம், உருவத்திருமேனி முதலிய மூன்றும் அதனை உணர்தற்பொருட்டும் வழிபடுதற் பொருட்டுங் கொண்ட திருமேனிகளென்றறிந்து, காயத்தொழில், மனத்தொழில் என்னும் இரண்டையும் விட்டு, ஞானத்தில் விருப்புடையவர்களாய் அறிவுத்தொழில் மாத்திரையால் வழிபடுவர்

ஞானத்திற் சரியையாவது: ஆசாரியரிடத்து ஞானசாஸ்திரங்களைக் கேட்டல். ஞானத்திற் கிரியையாவது கேட்டவைகளைச் சிந்தித்தல். ஞானத்தில் யோகமாவது தெளிதல். ஞானத்தில் ஞானமாவது நிட்டைகூடல்.

---



## உ. திருக்கோயில்

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் இருப்பினும் புறத்தே சிவலிங்க முதலிய திருமேனியும் குருவும் சங்கமமும் இடமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் நெய்போல விளங்கி நிற்பர். மற்றையிடங்களிலெல்லாம் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்பர். ஆதலினாலே நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை குரு லிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தையோடு வழிபடல்வேண்டும்.

இவ் வழிபாடு மேற்கூறிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் செயற்பாலதேயாம். மலநீங்கிய சிவஞானிகளும் பூர்வமலவாசனை தாக்காமைப்பொருட்டும் சிவானந்தம் மேன்மேலும் வளர்தற்பொருட்டும் சிவலிங்க முதலிய திருமேனிகளை வழிபடல்வேண்டும். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்று வடிவாகச் சிவபெருமான் விளங்குகின்றனர். இவற்றை முறையாக வழிபடுவோர் உண்மையுபதேசம் பெற்று முத்தியடைவர். அது,

> மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

என வருந் தாயுமானசுவாமிகள் திருவாக்காலும் உணரப்படும். சிவாலயத்தைச் சிவனெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்பினோர் சீவன்முத்தராவரெனச் சிவஞானபோதம் செப்புகின்றது. ஆலயவழிபாடு செய்து பெரும்பேறடைந்த மார்க்கண்டேயமுனிவரே இதற்குச் சான்றாகும். ஆலயவழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக்குணர்த்தி அவர்களை நல்வழிப்படுத்துமாறு திருவுளங்கொண்ட உமாதேவியார் காஞ்சிபுரம், திருவானைக்கா, மாயூரம், திருமயிலாப்பூர் முதலிய தலங்களிலும், விநாயகர் திருச்செங்காடு முதலிய தலங்களிலும், சுப்பிரமணியக்கடவுள் திருச்சேய்ஞலூர் முதலிய தலங்களிலும் ஆலயம் அமைத்துப் பூசித்தார்கள். திருநந்திதேவர், சமயாசாரியர், அகத்தியமுனிவர், பட்டினத்தடிகள், பிரமா, விட்டுணு,

இலக்குமி முதலிய எல்லோரும் ஆலயவழிபாடு செய்தன்றோ போகமோக்ஷங்களைப் பெற்றார்கள். அஃறிணைகளாகிய சிலந்தி, காரை, சரிக்குருவி முதலியனவும் ஆலயவழிபாட்டாலேயே முத்திபடைந்தன.

சிவாலயங்களில்லாத ஊர் எவ்வித செல்வங்களால் நிறைந்திருப்பினும் திருவுள்ள ஊரன்று; காடேயாம். இவ்வுண்மை "திருக்கோயிலில்லாத திருவிலூரும்... அவையெல்லா மூரல்ல அடவி காடே" என வரும் தேவாரத்தாலும், "விபூதியில்லாத நெற்றி பாழ்; சிவாலயமில்லாத கிராமம் பாழ்; சிவபெருமானைப் பூசியாத சென்மம் பாழ்; சிவபெருமானைப்பற்றிக் கூறாத சாஸ்திரம் பாழ்" என வரும் பிரமோத்தர காண்டத்தாலும் உணரப்படும்.

திருக்கோயிலும் அங்கே நடைபெறும் பூஜை, உத்ஸவம் முதலியனவும் அரவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்குக் கருவியாயுள்ளன. அவ்வுண்மை தேவாலயங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபம், பிராகாரம், கோபுரம் முதலியவற்றால் உணரப்படும். கருப்பக்கிரகம் முதலிய மண்டபங்கள் அருதாரஸ்வரூபமாம். ஒவ்வொரு பகுதிகளும் கடவுளது தூலத்திருமேனியின் ஒவ்வொரு பகுப்பைக் குறிப்பனவாம். ஆலயத்திலுள்ள பஞ்சாவரணங்களும் பஞ்சகோசங்களைக் குறிப்பனவாம். ஆலயங்களில் மூன்று பிராகாரம் மாத்திரம் உளவாயின் அவை தூலம், சூக்குமம், காரணம் என்னும் முச் சரீரங்களையும் குறிக்கும். இரண்டு பிராகாரம் உளவாயின் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும். ஒரே வீதியாயிருப்பின் இவைகளெல்லாம் அவ்வொரே வீதியில் அடங்கும். கோபுரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிகளும் கடவுளது தூலத்திருமேனியின் ஒவ்வொரு பகுப்பைக் குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது பராக்கிரமலீலாவிநோதங்களும், அவரது அதிகாரம் பெற்ற விஷ்ணுவாதிதேவர்களாதும், காமதேனு, அஷ்டதிக்குப் பாலகர், சூரியசந்திரர் முதலியோரது உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் பரமேசுரனின் கடவுட்டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்புசெய்ய ஏதுவாகும். சிவமூர்த்தத்தைச் சூழ்ந்திருக்கும் திருவாசி பிரணவவடிவும்



அது "ஓங்காரமே நற்றிருவாசி" என்னும் உண்மைவிளக்கத்தான் உணரப்படும். தூபி, கோபுரம் தூலலிங்கமெனவும், வும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்கும லிங்கமெனவும், அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனவும் படும். இவ்வுண்மை நோக்கித் திருமூலநாயனார்,

தூய விமானமுந் தூலம தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.

என்று அருளிச்செய்தார். சைவசமயநெறியிலும்,

தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க
மேலும் பலிபத் திரம்.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிவலிங்கம் நந்தி பலிபீடம் என்னும் மூன்றனுள், சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும், பலிபீடம் பாசமுமாகக் கொள்ளப்படும். பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் அநாதிநித்தியம் என்னும் உண்மையை உணர்த்துதற்காகவே ஆலயங்களில் இம் மூன்றும் நேராகத் தாபிக்கப்பட்டுள்ளன.

உயர்ந்த நான்கு வருணத்தாருள் உறப்புக் குறைந்தவர்களும், நான்கு வருணத்தாரல்லாத சங்கராசாதியாரும் தங்கள் தங்கள் அதிகாரானுகுணமாக ஆசாரியரிடத்துத் தீக்ஷைபெற்று,

தூவியிளக் கோபுரத்தை யீசனெனக் கைதொழு
பாவமறும் வாய்த்தறையின் பம்.

என்று வருத்தமறவுய்யும்வழி என்னும் நூல் கூறியவாறு தூபியையுங் கோபுரத்தையும் சிவபெருமானாகப் பாவித்து, வெளியிலிருந்தபடியே பத்திரபுஷ்பங்களைத் தூவித் துதித்தல் முறையாம்.

## ௩. ஆலயசேவை

சிவபுண்ணியம் பொதுவும் சிறப்புமென இருவகைப்படும். சிவதீக்ஷையென்னும் அங்கமின்றிச் செய்வது பொதுச் சிவ புண்ணியமாம். சிவதீக்ஷை என்னும் அங்கத்துடன் செய்வது சிறப்புச் சிவபுண்ணியமாம். சிறப்புச் சிவபுண்ணியத்தை அடைவதற்குப் பொதுச் சிவபுண்ணியம் உதவியாயிருக்கும். ஆதலால், தீக்ஷை பெற்றுத் திருத்தொண்டு செய்வது உத்தமோத்தமமாகும்.

மஹோத்ஸவ காலத்தில் சரியையாளர் முதலிய யாவரும் தத்தமக்குரிய நித்தியகருமத்தை முடித்துக்கொண்டு, ஆசாரமுள்ளவர்களாய் ஆலயத்துக்குப் போதல்வேண்டும். தூலலிங்கமாகிய கோபுரத்தையும், சூக்குமலிங்கமாகிய சிவலிங்கப்பெருமானையும் வழிபட்டுப் பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து, இயன்ற சிவத்தொண்டுகளைச் செய்தல்வேண்டும். ஆலயத்தில் உள்ள ஐந்து பிராகாரங்களையும் வலம்வருதலால் ஐந்து கோசங்களிலும் தங்கியிருக்கும் பாவங்கள் தேயும். பின்பு பஞ்ச சரீரங்களும் நீங்கிச் சிவவியாபகம் ஆன்மாவில் உண்டாம். மூன்று வீதிகளை வலம்வருதலால் முச்சரீர நீக்கமும், இரு வீதிகளை வலம்வருதலால் இருசரீர நீக்கமும் உண்டாம். நமஸ்கரிப்பதனால் தற்போதம் நீங்கி எண்குணம் விளங்கிச் சிவத்தோடு அத்துவிதம் உண்டாம். இதற்குப் பிரமாணம் சதாசிவரூபத்துக் காண்க.

சிவபெருமானது திருவிழாவில் வலம் வருவோர் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அசுவமேதயாக பலன் எய்துவர். குருவுக்குப் பின்னே செல்கின்றோருக்கும் பலன் அஃதேயாகும். துவஜாரோகணம் செய்யும் காலத்தில், துவஜபடத்தின் பின் வலம் வருவோர், வெள்ளி, பொன், மகவு, பௌத்திரர் முதலிய ஐசுவரியங்களை அநுபவித்திருப்பர். திருவிழாவில் நாடோறும் பிரதக்ஷிணம் வருவோர் உருத்திரராவார்கள் என்று சிவபுண்ணியத்தெளிவிற் செப்பப்பட்டிருக்கிறது.

காலையில் பிரதக்ஷிணம் செய்தலால் வியாதி நாசமும், மத்தியான்னத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் விரும்பிய சித்தியும், சாயங்காலத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் சர்வ பாவ நீக்கமும், அர்த்தயாமத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் மோக்ஷசித்தியும் உண்டாமென்று சகலாகமசாரசங்கிரகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

சூரியோதயந் தொடங்கி அர்த்தயாம பரியந்தமாயினும், ஒரு சாமமாயினும் அங்கப்பிரதக்ஷிணஞ் செய்தவர் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்று முத்தியடைவர்.

வரகுணபாண்டியனார், பிரமகத்தியாற் பிடிக்கப்பட்டு வருந்தி, அதை நீக்குதற்கு அந்தணர்க்குத் தானம் செய்தும், அரசவிருக்ஷத்தைப் பிரதக்ஷிணம் செய்தும், பசுக்களுக்குப் புல் முதலியன கொடுத்தும், பஞ்சகவ்வியம் அருந்தியும், வேறும் பற்பல புண்ணியங்களைச் செய்தும், நீங்கப்பெறாது, முடிவில் சிவாலயப் பிரதக்ஷிணம் செய்தன்றோ நீங்கப்பெற்றார்.

சந்நிதியில் உள்ள குப்பைகளை மெல்லிய துடைப்பத்தினால் திருவலகிடுபவர்கள் காமம், வெகுளி, மயக்கம், பொய் ஆகிய குப்பைகள் நீங்கிப் பரிசுத்தராய் விளங்குவார்கள்.

தத்துவஞானம் என்னும் நறுஞ் சாணத்தைக் கொண்டு, அன்பென்னுஞ் சலத்தோடு கலந்து மெழுகியவர் மனக்கோயிலில் சிவலிங்கத் தோற்றப்பெறுவார்கள். திருவிளக்கேற்றுபவர்களும், தீபங்களைத் தாங்குபவர்களும், கண்ணாடி தாங்குபவர்களும் சிவஞானத்தை அடைவார்கள். தூபந் தாங்குபவர்கள் ஆணவமலசத்தி நீங்கப்பெறுவார்கள். சாமரையாற் பணி செய்பவர்கள் மலநிவாரணத்தையும், திருவருட் செல்வத்தையும் அடைவார்கள். குடைபிடிப்பவர்கள் ஆஞ்ஞாசக்கரத்தையும் பெலத்தையும் அடைவார்கள். வாகனந் தாங்குபவர்கள் கணநாதராய்த் திருக்கைலாசமலையை அடைந்து இன்புற்றிருப்பார்கள். கர்ப்பூரதீபந் தாங்குபவர்கள் அத்துவித முத்தியடைவார்கள்.

பட்டினத்தடிகள்

காமம் வெகுளி கழிபெரும் பொய்யென்னுந்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
யரிதி னகழ்ந்து போக்கி.

என்பதனாலும் பிறவாற்றானும் உணரப்படும்.

## ௪. கடவுளை அலங்காரம் பண்ணல்

ஆன்மாக்களது கன்மவசத்திற்குத் தக்கவாறு சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்யுங் கடவுள், பல மூர்த்தங்களாகத் தோன்றி அவர்களுக்குப் போகமோக்ஷங்களைக் கொடுத்தருளுகின்றனர். அம் மூர்த்தங்களுட் சில சயனிப்பனவும், சில நடப்பனவும், சில நிற்பனவும், சில இருப்பனவும் ஆக உள்ளன. அன்பர்கள் பூசை பண்ணும்போது அம் மூர்த்திகள் சுகாசனமாக இருந்துகொண்டே அப் பூசையை ஏற்கும். சயனம் திருமாலுக்கே உசிதம். அம் மூர்த்திகளை ஆலயங்களில் ஆகமமுறைப்படி பிரதிட்டை செய்து பூசித்து வருவது தொன்றுதொட்டுள்ள வழக்காறும் விதியுமாம்.

நிற்பனவாகிய மூர்த்திகளை நின்ற ரூபமாகவும், இருப்பனவாகிய மூர்த்திகளை அந்த ரூபமாகவும், சயனமூர்த்தியை அந்த ஆகிருதியாகவும் அலங்கரித்து வணங்குதல் வேண்டும். மூர்த்தியின் திருமேனியில் கட்டுதல், மரக்கட்டை, லோகம் முதலியவற்றாற் செய்யப்பட்ட கால்கைகள் வைத்துக் கபடமாக அலங்கரித்தல், லீலாபேதமான விக்கிரகத்தை வேறொரு லீலாமூர்த்தியாக அலங்கரித்தல், சிவதேகத்தில் விஷ்ணு ரூபத்தைக் கற்பித்தல், பரமேசுரனின் திருமேனியில் நிருத்தரூபத்தையும், கல்யாணசுந்தரரிடத்தில் நிருத்தரூபத்தையும் அலங்கரித்தல், உக்கிரமூர்த்தியைச் சாந்தரூபமாகவும், சாந்தமூர்த்தியை உக்கிரரூபமாகவும் அலங்கரித்தல், சத்தியை நீக்கி அலங்கரித்தல், திருவாசியில்லாதபடி அலங்கரித்தல் முதலிய விபரீத அலங்காரங்கள் செய்யப்படின் விபரீத பலன் உண்டாம். ஆயுள் குன்றும். பிரபுக்கள், அரசர், ஆலய யஜமானர்கள் அங்கஹீனமாவார்கள். அத் தோஷம் நீங்கும் பொருட்டுப் பிராயச்சித்தம் செய்க. அவ்வத் தேவர்களுக்குரிய வஸ்திரம், யோக்கியமானதும் வாசனை பொருந்தியதுமான புஷ்பமாலை, உத்தமமான ஆபரணங்கள் ஆகிய இவைகளால் அலங்கரிக்கத்தக்கது என்று சிருத்திரிமலங்கார நிரூபணமும், காமிகம் வீரதந்திரம் முதலிய ஆகமங்களுங் கூறுகின்றன.

ஆலய அதிகாரிகள் ஆகமசாஸ்திர ஆராய்ச்சியுள்ள சதாசாரர்களாகிய சிவாசாரியர்களுடன் கலந்து அக்கிரமமான செயல்களை அகற்றிச் சற்கருமங்களைக் கைக்கொண்டு ஒழுகுவது உத்தமமாகும்.

## ௫. தாசிநடனமும், வாணவேடிக்கையும்

கோயில்களில் துன்மார்க்கமுள்ள தாசிகளை அமைத்து நடனம் செய்விப்பது பாவமாகும். உபயகாரர்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அரிய பொருளை, அறிவும் நல்லொழுக்கமும் உடைய சமய போதகர்களையும் ஓதுவார்களையும் அமைத்துச் சற்பிரசங்கம் செய்வித்தும், வேதங்களையும் திருமுறைகளையும் அத்தியயனம் செய்வித்தும், அபிஷேகத்திரவியங்களைக் கொடுத்து அபிஷேகம் செய்வித்தும், யாகத்துக்கு வேண்டிய நெய், சமித்து முதலிய உபகரணங்களைக் குறைவின்றிக் கொடுத்தும், தீபங்கள் இரவும் பகலும் அவியாதபடி பாதுகாத்தும், இவை போன்ற பிற புண்ணியங்களைச் செய்தும் சிவபக்தி வளரும் வழியிற் செலவுசெய்வது உத்தமோத்தமமாகும்.

இன்னும் சிலர் வாணவேடிக்கைகள் செய்து, அரிதில் தேடிய பொருளை அற்பநேரத்திற் கரித்தும் புகைத்தும் எரித்தும் உற்சவ தரிசனஞ் செய்ய வரும் அடியார்களை அச்சப்படுத்தி உயிர்வதையும் செய்கின்றனர். அன்றியும், அவர்கள் உடற்பற்றை நீக்கிச் சிவத்தியானஞ் செய்யுங் காலமாகிய அரிய உற்சவ காலத்தில் உடற்பற்று முதலியவற்றை உண்டுபண்ணிப் பழிபாவங்கட்கு ஆளாகின்றனர். அப் பழிபாவங்கட்கு ஆளாகாது அப் பொருளை மகேசுவரபூசை, வறியவருக்கு அன்னம் இடுதல், ஆலயத்திருப்பணி முதலிய சிவபுண்ணியங்களிற் செலவுசெய்வது உத்தமோத்தமமாகும். அது பிறவிப்பிணி நீங்கும் உயிரும் மோக்ஷமடையக்கூடிய நல்வழியாயிருக்குமே. இது, அமர்நீதிநாயனார் மகோற்சவ தரிசனத்துக்கு வந்த அடியார்களைத் திருவமுது செய்வித்துச் சிவலோகமடைந்த சரித்திரத்தாலும், கோச்செங்கட்சோழநாயனார் திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்துச் சபாநாயகரது திருவடிநீழலை அடைந்த சரித்திரத்தாலும் நன்கு உணரப்படும்.

சிவதருமோத்தரம்

திருப்பதி வணங்க வென்று சென்றதஞ் சிவநேசர்க்கும்
அருத்தியாற் கங்கை யாதி யாடிட நாடி னோர்க்கும்

அருத்தக வன்ன பான மவரவர்க் குபயோ கங்கள்
பொருத்தச் சூழைப் போக்கிச் சிவபுரம் புகுவர் தாமே.

மெய்ப்பொருள் நாயனார் முதலிய சிவனடியார்களும், தமிழ் வேந்தரிற் பலரும், பிறரும் வேதாகமவிதி தவறாது சிவாலயங்களிலே நித்திய நைமித்திகங்களைச் செய்வித்த புண்ணியப் பேற்றாலன்றோ தாந் தாம் விரும்பிய போகங்களை அனுபவித்து, சிவபெருமானுடைய திருவடிநீழலை அடைந்தார்கள்.

---

## ௬. கோயில் அதிகாரிகளும், சிவாசாரியர்களும்

குரு லிங்க சங்கம பத்தியுள்ளவர்களும், ஆகம உணர்ச்சி உள்ளவர்களுமாகிய பெரியோர்களே கோயில் அதிகாரிகளாய் இருத்தல் வேண்டும். அவர்களே ஆலயத்தை விதிப்படி நடாத்திச் சமயத்தை வளர்ப்பார்கள். அவர்கள் அங்கே நடைபெறுங் கிரியைகளையும், முறைகளையும், முறைப்படி செய்யாவிடின் அதனால் வருங் கேட்டையும் அறிந்து, பழிபாவங்களுக்குப் பயந்து, வேதாகம அறிவும் நல்லொழுக்கமும் ஈசுர பத்தியுமுடைய சிவாசாரியர்களை நியமித்து, கிரியைகளைச் செய்விப்பார்கள்.

கோச்செங்கட்சோழநாயனார். திருவானைக்காவில் அமுதலிங்கேசுரருக்கு அருச்சகர்களாக அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாகும் ஆதிசைவர்களை நியமித்தார். அவர்கள் அருச்சித்து வருநாளிலே, அரசரும் பணிகேட்ப மற்றையவர்களும் எக் கருமஞ் செய்யினும் இன்றியமையாது நல்ல விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுந் தன்மையுடைமையினால் தம்மை மதிக்குக் கர்வங்கொண்டார்கள். ஞானதலத்தில் வாழ்தலினாலும், அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதினாலும் பெருமைகள் எல்லாம் தமக்கு வந்தன என்று அறியாமல் அகமதிப்பால் கணிகையருடைய அழகை நுகர்தலும், சிவத்திரவியங்களைக் கவர்தலும், சிவபுண்ணியங்களைச் செய்யாதலும், பயின்றுவந்த ஒழுக்கங்களை முற்றாக விடுத்தலும், மணி அடித்தல், வாத்தியங்



களை முழக்குதல் என்னுமிவைகளே அன்றி, பிறவிப்பிணி நீங்க மெய்யன்போடு பூசை செய்யாது தவறுகளையே செய்தார்கள். மனதிற் றங்கிய கரவுடையவர்களாய் அச்சிவமறையோர் நடப்ப "மனமுருகி நினையாதார்க்கு வஞ்சன் காண்" என ஸ்ரீ வாகீசர் கூறியாங்கு வஞ்சர்க்கு வஞ்சகராகிய சிவபெருமான் திருவுள்ளங் கறுத்து அவர்களை அழிப்பதற்குத் திருவுள்ளங்கொண்டிருந்தார்

ஒருநாள் அந்தணர்கள் அமுதலிங்கேசுரருக்குப் பூசை செய்வதற்கு ஒரு சிறுவனை வைத்துவிட்டு, எல்லோரும் வெளிக்கொண்டு கொள்ளிடத்தைக் கடப்பதற்கு மரக்கலத்தில் ஏறிச் சென்றார்கள். சிவபெருமானுடைய திருவருளால் சூறைக்காற்றுச் சென்றலைக்கக் கலங் கவிழ்ந்தது. சிவப்பிராமணர்களும், மனைவியர்களும் பிள்ளைகளும் நீரில் வீழ்ந்து, துன்பமடைந்து இறந்தார்கள். ஆழமாகிய நீரிற் செல்லாது எஞ்சிய சிறுவனைச் சிவபெருமான் தமது திருவருளுக்கு இலக்காக்கி, வேதாகமங்களை உபதேசித்து, சிவபுண்ணியங்களைச் செய்யுமாறு வைத்தருளினார்

முன்னொருகாலத்தில் குமாரக்கடவுள் திருக்கைலாசமலையினின்றும் சிவபெருமானுக்குப் பூசை செய்வதற்கு உரியவர் என்று, திருப்பிடவூரில் சிவப்பிராமணர்களைக் கொண்டுவந்து தாபித்தனர். சிவபெருமான் அவர்களுள் சிலரை அழைத்து, நித்திய நைமித்திகங்களைச் செய்யும்படி வைத்தருளினார். வினைத் தொடர்ச்சியற்ற அவ் வந்தணர்கள் ஆன்மநாயகராகிய சிவபெருமான் நல்வினை செய்பவர்களை அருளுந் தன்மையையும், தீவினை செய்பவர்களைத் தண்டிக்குந் தன்மையையும் மனதில் நினைந்து நினைந்து, அச்சமும் அன்புமுள்ளவர்களாய், நித்திய நைமித்திகங்களைச் சிவபெருமானுடைய திருவுள்ளத்துக்கு இசையவும், மூவுலகும் வியக்கும் வண்ணமும் செய்தார்கள் இச் சரித்திரம் திருவானைக்காப் புராணத்திற் காணப்பட்டது.

ஆதிசைவர்கள் பூசிப்பதனால் சர்வசித்திகளும் உண்டாம். சதாசிவமூர்த்தியினுடைய பஞ்சவத்திரங்களாற் றீட்சிக்கப் பட்ட கௌசிகர் முதலிய முனிவர்களுடைய வமிசத்தில் உதித்

தவராயும், அங்கப் பழுதற்றவராயும், சமயாசாரபரிபாலகராயும், வேதாகம புராணங்களை அறிந்தவராயும், இடம்பம், அசூயை முதலிய குற்றங்கள் அற்றவராயும் உள்ளவரே பரார்த்தபூஜை செய்தற்கு யோக்கியராவர். உபவீதம், உருத்திராக்ஷம், உட்டிணீஷம், உத்தரியம், விபூதி என்பவை ஆசாரியருக்குரிய பஞ்சமுத்திரைகளாம். ஆசாரியர் விபரீதக் கிரியைகளைச் செய்தால் அவர் சயரோகத்தால் தண்டிக்கப்படுவர்.

---

## எ. நித்தியாதி கருமங்கள்

ஆசாரியர்கட்குரிய கருமங்கள் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்றாம். இம்மூன்றும் நித்தியம், நித்தியாங்கம் என்றும், நைமித்திகம், நைமித்திகாங்கம் என்றும், காமியம், காமியாங்கம் என்றும், ஒவ்வொன்று இவ்விரண்டாய் அறுவகைப்படும். நித்திய கருமங்கள் ஸ்நானம், தருப்பணம், சிவார்ச்சனை, அக்கினிகார்யம் செய்தலும் பிறவுமாம். நித்தியாங்க கருமங்கள் நித்தியகருமலோபம் வந்தபோது அதற்குப் பரிகாரஞ் செய்தலும், அஷ்டபந்தன சலனம் வந்தால் மீளவும் அஷ்டபந்தனம் சாத்தலும், சாம்வத்சரிகப் பிராயச்சித்தமாகப் பவித்திரம் சாத்துதலும், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம், கிருஷ்ணாஷ்டமி, சுக்கிலாஷ்டமி, அமாவாசை, பௌர்ணிமை, சூரியசந்திரகிரஹணம், மாச சங்கிராந்தி முதலிய புண்ணிய காலங்களில் விசேஷபூஜை செய்தலும் பிறவுமாம். நைமித்திக கருமங்கள் பிரதிஷ்டை, தீக்ஷை, மஹோற்சவம், நவகலச ஸ்நபனம், அஷ்டோத்தரகலச ஸ்நபனம், ஸஹஸ்ரகலச ஸ்நபனம் முதலாயினவாம். நைமித்திகாங்க கருமங்கள் பிரதிஷ்டை முதலியவற்றிற்கு ஆசாரிய தக்ஷிணையும், தீக்ஷைக்குச் சபிண்டீகரணத்துடன் கூடிய அந்தியேஷ்டியுமாம். காமிய கருமங்கள் சித்திகளைப் பெற விரும்பி விசேஷ தினங்களிலே விசேஷமாகச் செய்யும் விரதம், பூசை, செபம் முதலாயினவாம். காமியாங்க கருமங்கள் விதிப்படி செய்யும் விரதோத்தியாபனம் முதலாயினவாம்.

---

Printed by R. S. Ragunatha Iyer at the Sothidaprakasa Press, Kokuvil and Published by S. Kumaraswami Kurukkal (Editor), Atchuvely, Jaffna, on Thursday the 14th January 1943.